## பிடபெத்தர பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிடபெத்தர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சல் கூற்றும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 106,500 பெறுமதியான மூன்று ஒலிபெருக்கி உபகரணங்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மூன்று வங்கிக் கணக்கு தொடர்பான வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் காசுக் கையிருப்பு ரூபா 86,578 தொகை எனினும், அவை நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீர் களஞ்சிய இருப்புக்களை சேர்ந்த 47 வகையான பண்டங்கள் பெறுமதியை கணித்து கையிருப்பு தொகையென காட்டப்படாமையால் அந்த பெறுமதியினால் இறுதி இருப்பு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது,

(ஈ) பி.ச.7 கடன்பட்டோர் அறிக்கையின் பிரகாரம் ஏக்கர் வரி, நீர்க் கட்டணம் மற்றும் வாடகை ரூபா 2,262,914 தொகை எனினும் அப் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,756,158 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 493,244 தொகையினால் மிகையாகக் கணிக்கப்பட்டிருந்தது.

(உ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 28,003,340 தொகை எனினும் நிதிக்

கூற்றுக்களில் அவை ரூபா 30,227,850 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அப் பெறுமதி ரூபா 2,224,510 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ஊழியர் பிணைப் பதிவேட்டின் பிரகாரம் 20 அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பிணை வைப்பு பெறுமதி ரூபா 101,462 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அவை ரூபா 53,604 மாத்திரம் என்பதனால் குறைவாகக் கணக்கீடு செய்திருந்த தொகை ரூபா 47,858 ஆகும்.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 11 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 97,192,391 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடு/ பட்டோலைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 98,705,922 ஆகக் காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 1,513,531 ஆகும்.

1.3.3 தொங்கல் கணக்குகள்

--------------------------------------

முன்னைய ஆண்டு முதல் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 4,392 இற்கான தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 99,851,464 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 91,422,476 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

ரூபா 30,227,850 இற்கான சொத்துக்கள் தொடர்பாக கணிப்பீட்டு சபை அறிக்கைகள் மற்றும் ரூபா 2,428,618 இற்கான பொறுப்புக்கள் மற்றும் ரூபா 1,496,936 இற்கான வருமானங்கள் தொடர்பாக பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரித்த செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) விதி 218 | பரிசோதனை சபை ஒன்றின் மூலம் சபையினால் பயன்படுத்தப்படும் மற்றும் வதிவதற்கு எடுக்கப்படும் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களும் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வதற்கு தலைவரின் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 திகதி இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,897,611 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,470,127 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 1,101 | 914 | 217 |
| வாடகை | 5,312 | 4,003 | 1,202 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 605 | 218 | 70 |
| ஏனைய வருமானங்கள் | 6,565 | 8,354 | 98,124 |

2.2.2 ஏக்கர் வரி

-------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 203,738 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்காக ரூபா 31,035 இற்காக பில்போடப்பட்டவைகளுடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 234,773 ஆகும். பில் போடப்பட்ட தொகையில் மற்றும் நிலுவை தொகையில் இருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 18,427 தொகை ஒன்று அறவிடப்பட்டிருந்ததுடன் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 7.8 ஆகிய சிறிய பெறுமதியினையே கொண்டிருந்தது.

2.2.3 வாடகை

----------------

மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை பெறுமதி ரூபா 5,312,000 தொகையாக காணப்பட்டதுடன் கணக்காண்டு இறுதித் திகதியில் நிலுவைத் தொகை ரூபா 1,202,755 தொகையாகக் காணப்பட்டதுடன் அது மதிப்பீட்டுத் தொகையில் நூற்றிற்கு 22 ஆகும்.

2.2.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

--------------------------------------------------

முன்னைய பல வருடங்களாக முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 70,522 இற்கான நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 ஏனைய வருமானங்கள்

---------------------------------------

ஏனைய வருமானக் கடன்பட்டோர் மீதி ரூபா 98,124,676 ஆகக் காணப்பட்டது.

2.2.6 நீர்க் கட்டணம்

-------------------------

(அ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வதியும் குடியிருப்போருக்கு பிரதேச சபையின் மூலம் நீர் வழங்கல் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு நீர் வசதிகள் பெற்றிருந்த நுகர்வோர்களினால் முறைப்படி பில்பத்திரங்கள் தீர்க்கப்படாமையால் 2014 திசெம்பர் 31 திகதி வரையும் 129 நுகர்வோரின் நீர் தொடர்பு நீக்கப்பட்டிருந்ததுடன் அந்த நுகர்வோர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 572,697 ஆகும்.

(ஆ) 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 982,520 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில்போடப்பட்டவை ரூபா 877,093 உடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,859,631 ஆகும். பில்போடப்பட்ட தொகையில் மற்றும் நிலுவைத் தொகையில் ரூபா 1,103,554 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 59 ஆகும்.

2.2.7 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 2,586,117 |
| முத்திரைக் கட்டணம் | 6,747,225 |

2.2.8 தொலைபேசி செலுத்துகை டவர் கட்டணம்

---------------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2007, 2009, 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் போது 07 தொலைபேசி செலுத்துகை டவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த டவர்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்கு துணை விதிகள் ஆக்கியிருக்கவில்லை. அதன் காரணமாக சபை நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை இழந்துள்ளது.

2.2.9 கடை வாடகை

---------------------------

கடைக்குச் சொந்தமான கடைகளில் இருந்து வாடகை அறவிடப்படல் மிகவும் பலவீன நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவைத் தொகையினை 2015 ஜூலை 22 திகதி வரை அறவிட முடியாது காணப்பட்டதுடன் அத் தொகை ரூபா 318,910 ஆகும்.

2.2.10 வீத வரி

-----------------

2010 பெப்ரவரி 08 திகதி இலக்கம் 1641/41 கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் மூலம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த 04 கிராம அலுவலர் பிரிவுகள் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் படி முன்னேற்றப்பட்ட பகுதிகள் என பகிரங்கப்படுத்தியிருந்த போதிலும் அப் பகுதிகளில் வீத வரி அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படாமையால் 2010 பெப்ரவரி மாதம் முதல் 2014 திசெம்பர் 31 திகதி வரை அதாவது சுமார் 05 வருட காலம் வீத வரி வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------------------

2015 மார்ச் 31 திகதிய இலக்கம் 08/2005 கொண்ட பொது நிருவாக செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரிவு 11.5 இன் பிரகாரம் ஆதனக் கடன்களுக்கான கடன் மற்றும் வங்கி வட்டி விகிதாசாரம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4.2 இற்கான வட்டி இடையிலான வித்தியாசம் அரசினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். அவ்வாறாயினும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீளளிப்புச் செய்யப்பட்டிருக்காத தொகை ரூபா 236,645 ஆகும்.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான மொறவக்க, பிடபெத்தர மற்றும் களுபோவிடியன நூலகங்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நூலகங்களில் ரூபா 102,400 பெறுமதியான 96 புத்தகங்கள் கணிப்பீட்டுக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அத்துடன் பொறுப்பான நபர்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகம், ஆயுள்வேத மருந்துச்சாலை, நூலங்கள், முன்பள்ளிகளின் பொருட் பதிவேட்டு பொருட்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணிப்பீட்டுச் சபையின் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.3 மனித வள முகாமைத்துவம்

------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 02 | 01 | 01 | - |
| இரண்டாம் தரம் | 21 | 18 | 03 | - |
| ஆரம்ப தரம் | 30 | 26 | 04 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 05 | - | 05 |
| | 53 | 50 | 08 | 05 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாரினால் பதவியணிச் சம்பளம் மற்றும் சபை அமர்வுப் படி என ரூபா 13,214,315 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் ஆண்டின் போது பதவியணிச் சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 17,983,221 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 4,768,906 இற்கான மேலதிகச் செலவுப் பொறுப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 அகக் கணக்காய்வு

-------------------------------

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 2005 நவம்பர் 08 திகதிய இலக்கம் 03 கொண்ட உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்று நிருபத்தின் பந்தி 8 இன் பிரகாரம் அகக் கணக்காய்வு அலகு ஒன்று அமைக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------------

சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை நிறுவியிருக்கவில்லை.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

மீளாய்வாண்டிற்கான சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் காணப்பட்ட வருமானம் மற்றும் செலவு ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்படாமையால் பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்